தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர் - 5 திருவள்ளுவராண்டு - 2017 ஆடி - 29 14-8-1986 இதழ் - 5

ஐந்தாண்டுத் துணைவேந்தர்
முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம்

தமிழன்னைக்குத் தமிழ்நாட்டு மாண்புமிகு முதலமைச்சர் வழங்கிய வைரப் பரிசு, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

பரிசு வைரத்தைப் பட்டை தீட்டிப் பளபளக்கச் செய்யும் முதல் துணைவேந்தராக முனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் பொறுப்பேற்றார்கள். நுண்ணறிவு இவர் பெற்ற பிறவிப் பரிசு; ஞாயம் இவர்தம் உயிர் மூச்சு; நாடித்துடிப்பெல்லாம் உழைப்பின் வடிப்பு.



"மதிநுட்பம் நூலோடுடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை" — என்னும்

வள்ளுவ வாய்மொழியின் முழு இலக்கியம் இவர். அதிநுட்பம் தொடக்கமாக, மதிநுட்ப நிறைவு வரை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நடைமுறை வாழ்வாக்கினார்.

ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலப் பொறுப்பில் தம்மையே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். விடிவெள்ளியோடு எழுந்து, நடுயாமத் துயிலேற்கும் வரை, வேற்று நினைவோ மாற்றுக் கருத்தோ இன்றிப் பொறுப்பாற்றினார். அவர்தம் முற்றுழைப்பின் பயனாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒரு பெரும் அறிவு வளர்ச்சி நிலையமாக நிமிர்ந்து நிற்கின்றது.

தமிழ், புத்தம் புதிய துறைகளில் தழைக்கவும், தமிழ் அறிஞர் பன்னாட்டு அறிஞர்க்குச் சற்றும் தாழ்ந்தவர் அல்லர் என்று புகழ்பெறவும் பாடுபட்டார்.

கணிப்பு மையமும், பதிப்புத் துறையும், களஞ்சிய ஆக்கமும், ஆய்வுப் பணிகளும், தத்துவமையமும், மலையின மக்கள் ஆய்வும், ஆழ்கடல் ஆய்வும், படைப்பிலக்கியத்திற்கும், பல்வேறு ஆக்க வளர்ச்சிக்கும் நிறுவப்பட்ட பரிசு - அறக்கட்டளைகளும், புதிய வளாகத்தில் உருவாகி வரும் கருத்தார்ந்த கட்டடங்களும் அவர்தம் பெயரைத் தமிழர் வரலாற்றில் கல்லெழுத்தாய் நிலைநிறுத்துவனவாகும்.

மொழியியலில் திராவிடமொழியியலைத் தனிப்பிரிவாக வகுத்து, அதில் போற்றற்குரிய வித்தகராகி, பன்னாட்டறிஞர் தம் கவனத்தைத் திராவிட மொழியின்பால் ஈர்க்க முன்வந்த இயக்கத்தின் முன்னோடியானார். அவ்வியக்கத்தை மேலும் வளர்க்க வேண்டும் என்னும் நீங்காத் துடிப்பும், தொய்வேற்பட்ட தம் ஆய்வுப்பணியைப் பெய்மழையாக்க வேண்டும் என்னும் ஆர்வ எடுப்பும் துணைவேந்தர் பணிக்கால எல்லைக்கு முன்னரே தன்விருப்பப் பணிவிலகலுக்குக் காரணியங்களாயின. 31-7-1986 வியாழன் மாலை, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பைவிட்டு நீங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தார்க்கு அவர் விடுத்த பிரியாவிடை எழுத்து, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின்பால் எத்துணை ஆழமாகத் தோய்ந்திருந்தார் என்பதன் பொன்னெழுத்து:

"நான் காலமானபின் என்னுடற் சாம்பலின் இம்மியளவைத் தஞ்சைத் தென்வளாகத்தில் ஒரு மூலையில் என் கண்முன்னே வளர்ந்த மரத்தடியிலும், காஞ்சி, உதகை, மண்டப மையங்களில் வளரும் மரத்தடியிலும் புதைத்திட என் குழந்தைகள் அனுப்புவர்"

— அர. கோபாலகிருட்டினன்

தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடும் அறிவியல் களஞ்சியம்

தமிழ் மொழியில் வாழ்வியல், அறிவியல் ஆகிய துறைகளில் களஞ்சியங்களை 34 தொகுதிகளில் உருவாக்கும் பெரும் பொறுப்பைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்றுள்ளது.

வாழ்வியல் பிரிவில் 14தொகுதிகள் வெளியிடுவதற்குத் திட்டமிட்டு,முதலாவது தொகுதி 1986 ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்டது. அறிவியல் பிரிவில் 20 தொகுதிகள் வெளியிடுவதற்குத் திட்டமிட்டு, முதலாவது தொகுதி இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

அறிவியல் களஞ்சியத்தின் தொகுதிகளில் சிக்கலான அறிவியல் தொழில் நுட்பக் கோட்பாடுகள் முதன் முறையாகத் தமிழில் சுருக்கமாகவும்,தெளிவாகவும் விவரிக்கப் பட்டுள்ளன. தமிழில் அறிவியலைச் சொல்லக்கூடிய எவருமே முதலில் சிக்கலை உணர்வது வழக்கம். எண்ணற்ற விளக்கங்களையும், அறிவியல் உண்மைகளையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புச் செய்வது என்பது எளியதன்று. அறிவியலும் தொழில்நுட்பமும் மிக வேகமாக வளர்ந்துவரும் இந்நாளில் இத்துறைகளின் கோட்பாடுகள், தொகுதிகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுக்கான பல சொற்களை ஆங்கிலமே கிரேக்கமொழியிலிருந்துதான் கடன் வாங்கியுள்ளது என்பது உரைத்தக்கதாகும். ஆகவே, இலக்கிய வளமும் தத்துவப் பெருமையும் கொண்ட தமிழ் மொழி உலகில் தனது உயர்ந்த இடத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், 20-ஆம் நூற்றாண்டிலிருந்து 21-ஆம் நூற்றாண்டுக்கு விரைந்து செல்லவும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகட்ட வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, இக்களஞ்சியங்களில் பின்பற்றப்பட்ட கொள்கையானது மற்றவர்களுக்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளது எனலாம்.



வெளியாகியுள்ள அறிவியல் களஞ்சியத்தின் முதலாவது தொகுதி,ஏறத்தாழ 375 கட்டுரைகளை 1000 பக்கங்களில் தாங்கியுள்ளது. அவையனைத்தும் விளக்கப் படங்களுடன் தரப்பட்டுள்ளன. இவற்றில் கொடுக்கப் பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சான்றதிகாரமுடையவை. அறிவியலில் ஆழமான அறிவு இல்லாதவர்களுக்குக்கூட இது ஒரு பார்வை நூலாகப் பயன்படவுள்ளது. சுருங்கச் சொன்னால், நவீன காலங்களுக்கேற்ற இந்நூல் புதிய செய்திகளை அறிந்துகொள்ள விரும்புவோருக்கும், அறிந்து கொண்ட செய்திகளை ஆழமாகக் கற்க விரும்புவோருக்கும் உதவ வல்லது.

—என்.எல்.இராமசாமி

தமிழ்ப் பல்கலைக் கழக இடைக்கால நிருவாகப் பொறுப்பு

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகத் திகழ்ந்த முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் 31-7-'86 அன்று தம் விருப்பப்படி பணியிலிருந்து விலகினார்கள்.

"புதிய துணைவேந்தர் பொறுப்பேற்கும்வரை தமிழ்ப் பல்கலைக் கழக நிருவாகத்தைத் தமிழக அரசின் கல்வித் துறைச் செயலாளர் மற்றும் ஆணையர் திரு தி.து.சுந்தரராசு இ.ஆ.ப. அவர்கள் வகித்து வரலாம்" என்று பல்கலைக் கழக ஆளுநர் குழு முடிவு செய்தது. இம் முடிவைத் தமிழக ஆளுநர் ஏற்று இசைவளித்தபடி திரு தி.து.சுந்தரராசு அவர்கள் நிருவாகப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

"நூலகத் தகவல் பணிகளுக்கு நுண்கணிப்பொறிகள்" கருத்தரங்கு

இந்திய நாட்டில் தயாரிக்கப்படும் நுண்கணிப்பொறிகளை நூலகத் தகவல் பணிகளுக்குப் பயன்படுத்தும் முறைகள் பற்றிய கருத்தரங்கு பல்கலைக்கழக நல்கைக்குழுவின் உதவியில் ஆகட்டு 23,24ஆம் நாள்களில் தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற இருக்கிறது. இந்திய நாட்டளவில் 50 நூலகவியலாளர்கள் இக்கருத்தரங்கில் பங்கு பெறுவர். இந்திய நாட்டிலேயே தயாரிக்கப்படும் நுண்கணிப்பொறிகளை நூலகத் தகவல் பணிகளுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துவதும்,அதற்கான வழிமுறைகளை ஆராய்வதுமே இக்கருத்தரங்கின் நோக்கமாகும். புதுடெல்லி 'இன்சுடாக்' நிறுவனத்தலைவர் திரு டி.எசு.இராசகோபாலன், இந்தியத் தலைமைச்செயலக நூலக இயக்குநர் திரு எசு.சி. பிஸ்வர்ஸ், சென்னைப் பல்கலைக் கழக நூலகவியல் பேராசிரியர் திரு பி.கங்காதரராவ், தமிழ்ப்பல்கலைக் கழகக் கணிப்பொறியியல் பேராசிரியர் திரு கா.செ. செல்லமுத்து ஆகியோர் கருத்தரங்கின் நான்கு அமர்வுகளுக்குத் தலைமையேற்பார்கள். கருத்தரங்கினைப் பதிவாளர் திரு இர.ஆலாலசுந்தரம் அவர்கள் தொடங்கி வைக்க, நடுவண் அரசின் பதிப்பு மற்றும் தகவல் இயக்ககத்தின் 'சி எசு ஐ ஆர்' துறையின் பதிப்பாசிரியர் திரு எசு.அருணாசலம் அவர்கள் தலைமையுரையாற்றுவார். அனைத்துலக அளவில் நூலகத் தகவல் பணிகளை வர்த்தக முறையில் நடத்திவரும் புகழ்பெற்ற நிறுவனங்களின் பணிகளைக் குறிப்பிடும் வெளியீடுகள் ஒரு சிறப்புக் கண்காட்சியாக அமைக்கப்படும்.

—த.பத்மநாபன்
கருத்தரங்க இயக்குநர்

உயிர் வேதிம மருந்தியல் குறுகிய காலப் பணிப்பட்டறை நிறைவு விழா

புதுதில்லி பல்கலைக் கழக மானியக்குழு நல்கையில் நடத்தப்பட்ட உயிர்வேதிம மருந்தியல் குறுகிய காலப் பணிப்பட்டறை (சூலை 21 — ஆகட்டு 10,1986)யின் நிறைவு விழா, தமிழ்ப் பல்கலைக் கழகச் சித்தமருத்துவத் துறையினரால் ஆகட்டு 10, 1986இல் காலை 10.00 மணி அளவில் அரண்மனை வளாகத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்டவர்களை இப்பணிப்பட்டறையின் இயக்குநரான பேராசிரியர் ஜ. சாதீக் வரவேற்றுப் பேசினார். தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர. ஆலாலசுந்தரம் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு என். எம். முத்தையா அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். சென்னை, புற்றுநோய் நிலையத்தைச் சார்ந்த முனைவர் பி. நாகராசன் இப்பணிப்பட்டறையின் பயிற்சிப் பாடங்கள் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன என்று கருத்துத் தெரிவித்தார். சித்தமருத்துவத் துறை திரு ம. செகதீசன் நன்றி நவின்றார்.

ஜ. சாதீக்
சித்த மருத்துவத் துறை

கணிப்பொறிவழி திருமந்திரச் சொல்லடைவு

திருமந்திரத்தின் 3027 பாடல்களுக்கும் (12108 வரிகள்) ஆறு நாள்களில் கணிப்பொறி மூலம் சொல்லடைவு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல்லடைவு சூன் 13-15 நாள்களில் காஞ்சி தத்துவ மையத்தில் நடைபெற்ற திருமந்திரக் கருத்தரங்கில் கலந்துகொண்ட அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டது. "இதன் சொல் வழக்கைக்கொண்டு திருமந்திரம் 10-ஆம்நூற்றாண்டைச் சார்ந்தது என முடிவு பெற வழியுண்டு" எனத் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் கூறினார்கள். -கணிப்புமையம்

கிறித்தவ ஆய்வுக் கட்டில் அறக்கட்டளை

தமிழ்நாடு ரோமன் கத்தோலிக்கப் பேராயர் குழு சார்பிலும், கிறித்தவச் சமுதாயம் சார்பாகவும் பாண்டிச்சேரி பேராயர் பேரருள் திரு வி. எஸ். செல்வநாதர் அவர்கள், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கிறித்தவ ஆய்வுக் கட்டிலுக்காக அறக் கட்டளை நிறுவிட ஓர் இலட்சத்து ஓர் உருவாவிற்கான காசோலையை வழங்கியுள்ளார்கள்.

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கணிப்பொறிவழி எழுத்து வரிவடிவ மாற்றம்

கணிப்பொறிவழி ஆங்கிலம், தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் எழுத்து வரிவடிவ மாற்றுமுறையில் வெற்றி கண்ட தமிழ்ப் பல்கலைக்கழகக் கணிப்புமையம் தற்போது வங்காள மொழியையும் இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றியுள்ளது. இம்முறையின் மூலம் இடுவரல் உரோமன் எழுத்து வரிவடிவமாற்றம் கணிப்பொறிவழி உடனிகழ்வாக, பல்வேறு எழுத்து வரிவடிவ மாற்றமாகக் கணிப்பொறிவழி மாற்றப்பட்டுப் புள்ளி அச்சுப்பொறிக் கருவியின் மூலம் அச்சேற்றப்படுகிறது. இந்திய மொழிகளில் கிடைக்கும் செய்திகளைச் சேகரித்துவைத்துக் கணிப்பொறி மூலம் அச்சேற்ற முடிகிறது. இந்திய மொழிகளின் பல்வேறு எழுத்து வரிவடிவ மாற்று முறைகளையும் ஒலிப்பு முறைகளையும் படிக்கவும், ஒப்பிட்டுப்பார்க்கவும், நுணுகி ஆராயவும் இந்திய மொழி சார்ந்த கணிப்பொறி, தொலைவரித் தட்டச்சுப்பொறி மற்றும் தொலைச்செய்தி போக்குவரத்துக் கருவிகளுக்கான எழுத்து வரிவடிவமாற்றமுறைக்குத் தேவையான மாற்றத்தைச் செய்ய வாய்ப்பளிக்கிறது. இத்திட்டத்தை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர் குழு பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துள்ளார்கள்.

தொலைபேசிக் கையேடுகளையும், புகைவண்டி வழிகாட்டிக் கையேடுகளையும் கணிப்பொறிவழி வட்டார மொழிகளில் தற்போது அச்சேற்றமுடியும். தமிழ் எழுத்து வரிவடிவ மாற்றத்தில் அச்சான மலையாள நாவலை மலையாளம்-தமிழ்/அகராதித் துணைகொண்டு/தமிழ் தெரிந்த ஒருவர் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ள முடியும்.

இத்திட்டம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் அறிவுரையோடு கணிப்புமையப் பேராசிரியர் கா. செ. செல்லமுத்து அவர்களால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் 15033/82XI

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 005.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

..க அதிகாரி
..ச மகாராசா சரபோசி
..சுவதி மகால் நூலகம்
..ஞ்சாவூர்

தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும் களஞ்சியங்கள்

1. வாழ்வியற் களஞ்சியம்
தொகுதி I அ-அ...
நூல் அளவு: திம்மி 1/4 பக்கங்கள் 977
விலை உரு.300/-

2. அறிவியல் களஞ்சியம்
தொகுதி I (அக்கரூட்டு - அமில அமைடு)
நூல் அளவு: திம்மி 1/4 பக்கங்கள் 1024
விலை உரு. 300/-

3. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
தொகுதி I அ-ஔ
நூல் அளவு: திம்மி 1/4 பக்கங்கள் 580.
விலை உரு. 250/-

4. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
தொகுதி II க-கௌ
நூல் அளவு: திம்மி 1/4 பக்கங்கள் 611
விலை உரு. 250/-

களஞ்சியங்களின் முதல் தொகுதிகள் காலப்போக்கில் விற்பனையில் கிடைப்பது அரிதாகிவிடும் என்பதை அறிவீர்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம்
- உ.வே.சா. பதிப்பின் மறுபதிப்பு
உரு.120-00

மனிதனும் மரபியலும்
-ஞா. இராசராசேசுவரி
உரு. 7-50

செழியதரையன் பிரபந்தங்கள்
-பொதுப்பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளை
- குறிப்புரை ப.வெ. நாகராசன்
உரு.107-00

குடற்புண்ணைக் குணப்படுத்தலாம்
- சு. நரேந்திரன்
உரு. 5-00

மேலாளர்
- ஆங்கிலமூலம் கார்டன் ப். ராபி;
தமிழாக்கம் இரா. சுப்பராயலு
உரு. 30-00

தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்
- வெ. வரதராசன்
உரு. 55-00

அறுவைச் சிகிச்சை நோய்நாடல்
- லெ. சிவராமன்
உரு.120-00

பத்துப்பாட்டு
- மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்
- உ.வே.சா. பதிப்பின் மறுபதிப்பு
உரு.140-00

தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி
- தி. முருகரத்தனம்
உரு. 57-00

அகத்தியர் குழம்பு
- சே. பிரேமா
ப.வெ. நாகராசன்
உரு. 40-00

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.